பரிசுத்த பவுல் ஆலயம் - குவைத்

அஹமதி தமிழ் திருச்சபை



# நீங்கள் கிறிஸ்துவினுடையவர்கள்; கிறிஸ்து தேவனுடையவர்

I கொரி. 3:23

செப்டம்பர் 2012
மலர் : 13

செய்தி மலர்
இதழ் : 05



# உங்கள் சகோதரரின் சிந்துனையில்...



கிறிஸ்துவுக்குள் பிரியமான சகோதர சகோதரிகளுக்கு ஆண்டவரும் இரட்சகருமாகிய கிறிஸ்து இயேசுவின் நாமத்தில் நல்வாழ்த்துக்கள்.

தேவனுடைய பெரிதான கிருபையால் இந்த வருடத்தின் 9 —ம் மாதத்தில் பிரவேசிக்கும் பாக்கியத்தை தேவன் நமக்கு கொடுத்திருக்கிறார். கடந்த மாதம் நடந்த எல்லா ஆராதனைகள் மற்றும் சபையின் ஊழியங்கள் எல்லாவற்றிலும் தேவனுடைய ஆசீர்வாதம் இருந்தது. விஷேசமாக 20.8.2012 அன்று நடந்த ஒரு நாள் "ஒடுக்க கூடுகையை (RETREAT)" தேவன் நமக்கு மிகுந்த ஆசீர்வாதமாய் மாற்றித்தந்தார். சபையின் சிறு பிள்ளைகள், வாலிபர்கள், நம் முழு சபையினர் இணைந்து செயல்பட்ட நிகழ்ச்சிகள், அன்பின் விருந்து எல்லாவற்றிலும் தேவனுடைய நாமம் மகிமை அடைந்ததற்காக தேவனை நன்றியோடு ஸ்தோத்தரிக்கிறேன். நம் சபையின் விசுவாசிகள் விடுமுறைக்கு தாய்தேசம் சென்று சுகத்துடன் திரும்பி வந்ததற்காகவும் தேவனுக்கு ஸ்தோத்திரம் செலுத்துகிறேன்.

"மடங்கடிக்கப்பட்டவர்களை கர்த்தர் தூக்கிவிடுகிறார்" (சங். 146:8) ஒருவேளை கடந்த நாட்களில் பல காரியங்களில் நான் மடங்கடிக்கப்பட்டேன் (தோற்கடிக்கப்பட்டேன்) என்று நினைத்துக் கொண்டிருக்கலாம். இந்த மாதத்தில் தேவன் தரும் வாக்குத்தத்தம் "உன்னை கர்த்தர் தூக்கிவிடுகிறார்". என்னை விசாரிக்க, தூக்கிவிட என் பிரச்சனையை மாற்ற யாரும் இல்லையே என்று வேதனையோடு இருக்கலாம். எப்படிப்பட்ட தோல்வியாக இருந்தாலும் உன்னை தூக்கிவிட கர்த்தரால் (இயேசுவால்) முடியும். ஏனென்றால் சகலத்தையும் ஆளுகை செய்கிறவரும் எல்லாவற்றையும் கரத்தில் வைத்திருப்பவரும் நம் தேவனே. அவர் ஒருவரே சர்வ வல்லமையும் அதிகாரமும் உடையவராக இருக்கிறார். ஒருவரை உயர்த்தவும் தாழ்த்தவும் அவரால் முடியும் (சங். 146:6).

"ஆகையால் யாக்கோபின் தேவனை தன் துணையாகக் கொண்டிருந்து தன் தேவனாகிய கர்த்தர் மேல் நம்பிக்கையை வைக்கிறவன் பாக்கியவான்" (சங். 146:5). எனவே இயேசுவை துணையாகக் கொண்டு அவர் மேல் உங்கள் நம்பிக்கையை வையுங்கள். ஏனென்றால் உங்களைத் தூக்கிவிடும்படி அவருடைய கரங்கள் ஆயத்தமாயிருக்கிறது.

இரவும் பகலும் கர்த்தருடைய வேதத்தில் தியானமாயிருக்கிற மனுஷன் பாக்கியவான் _சங். 1:2

விடுமுறைக்குப் பின் பள்ளிக்குச் செல்லும் நம் சபையின் பிள்ளைகளுக்காக ஜெபித்துக் கொள்ளுங்கள். இந்த மாதம் சபையின் மூலம் நடைபெறவிருக்கும் ஆராதனைகள் ஊழியங்களுக்காகவும் ஜெபித்துக் கொள்ளுங்கள். நீங்களும் கலந்து கொண்டு தேவ ஆசீரைப் பெறுங்கள். நம் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் கிருபையும் சமாதானமும் நம் அனைவரோடும் கூட இருப்பதாக. ஆமென்.

கர்த்தரின் பணியில்
சகோ. ரவிச்சந்திரன்

## சபையின் 2012-ம் ஆண்டின் வாக்குத்தத்தம்

**"பலங்கொண்டு திடமனதாயிரு; திகையாதே, கலங்காதே, நீ போகும் இடமெல்லாம் உன் தேவனாகிய கர்த்தர் உன்னோடே இருக்கிறார் என்றார்"**

யோசு. **1:9**




### வானவில்

நீ
அழகாய் இருக்கிறாய்
என்று அலட்டிக்காதே.
நீ இந்த உலகில் பிறந்தது
உனக்குத் தெரியாது
எனக்குத் தெரியும்.
கர்த்தர்... எங்களுக்காக
பூமியோடு செய்த உடன்படிக்கைக்கு...
நீயல்லவா சாட்சி. (ஆதி. 9:13)

- லிடியா ஆ. தாஸ்

பயத்துடனே கர்த்தரைச் சேவியுங்கள், நடுக்கத்துடனே களிகூருங்கள் -சங். 2:11



# நாமே திருச்சபை



தேவ செய்தி

தேவனுடைய கிருபையினால் இந்த செய்திமலர் மூலமாக நமது சபையாரை சந்திப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன். நமது சபை தேவனுடைய அன்பை அறிகிற அறிவிலும், தேவனை பூரணமாய் அறிகிற அறிவிலும் வளர ஜெபிக்கிறேன்.

தேவனுடைய கிருபையினால் இந்த செய்திமலர் மூலமாக நமது சபையாரை சந்திப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன். நமது சபை தேவனுடைய அன்பை அறிகிற அறிவிலும், தேவனை பூரணமாய் அறிகிற அறிவிலும் வளர ஜெபிக்கிறேன்.

“சீரமும் ஒரே அவயமாயிராமல் அநேக அவயங்களாயிருக்கிறது. தேவன் தமது சித்தத்தின்படி அவயங்கள் ஒவ்வொன்றையும் சீரத்திலே வைத்தார். சீரத்திலே பிரிவினையுண்டாயிராமல் அவயங்கள் ஒன்றைக்குறித்து ஒன்று கவலையாயிருக்கும்படிக்கு, தேவன் கனத்தில் குறைவுள்ளதற்கு அதிக கனத்தைத் கொடுத்து இப்படி சீரத்தை அமைத்திருக்கிறார். நீங்களே கிறிஸ்துவின் சீரமாயும் தனித்தனியே அவயங்களாயுமிருக்கிறீர்கள்” (1கொரி. 12:14 – 27) என்று கூறும் கர்த்தருடைய வசனத்திற்கு ஏற்றார்ப் போல் நம் சபையினர் ஒவ்வொருவரும் வேறு வேறு அயங்களாயும் கனத்திலும் வெவ்வேறு விதமாயும் கர்த்தரால் உருவாக்கப்பட்டிருக்கிறோம். கர்த்தருடைய வசனத்தின்படி உருவாக்கப்பட்ட அவயவத்தில் ஒன்று தன் கனத்தை நினைத்து மேன்மை பாராட்டி தற்பெருமை அடைவதும் சற்று கனவீனமான அவயவமானது தன் கனவீனத்தை எண்ணி சோர்ந்து வீழ்ந்து கிடப்பதும் கர்த்தருக்கு பிரியமானதல்ல. அது சபையின் மேன்மைக்கும் ஏற்றதல்ல. நம் பார்வைக்கு கனமாகவும் கனவீனமாகவும் காணப்படும் அவயவங்களானது தனித்தனி வேைகளை செய்யும் பொழுது அவைகளுக்கு ஏற்ற துறைகளில் இரண்டுமே மேன்மையும் கனமும் பெற்று சிறந்து விழங்குகிறது என்பதை நாம் மறந்துவிடக் கூடாது. ஆகவே நம் பார்வைக்கு ஏற்றார் போல் எதையுமே கனமானது என்றும் கனவீனமானது என்றும் எண்ணிவிடவும் கூடாது. ஏனென்றால் இரண்டுமே கர்த்தரின் பார்வைக்கு ஒன்றாய் இருக்கிறது.

இதையும் தாண்டி பிற அவயவங்களை கனவீனமான பாண்டம் என்று எண்ணத் தோன்றும் பொழுது அந்த கனவீனமான அவயவத்தை கனமான அவயமாய் மாற்ற நம்மால் முடிந்ததை செய்து கனவீனமானதை கனமானதாகச் செய்ய வேண்டும் என்பதையும் கனமான அவயவம் மறந்துவிடக் கூடாது. இதற்கு மாறாக மேட்டிமையோடு கனமான அவயவம் செயல்படும் போதுதான் “சிலர் தேவனைப்பற்றி அறிவில்லாருக்கிறார்களே; உங்களுக்கு வெட்கமுண்டாக இதை சொல்கிறேன்” (1கொரி. 12:14 – 27) என்று அப்படிப்பட்டவர்களை தேவன் மிகவும் கடிந்து கொள்ளுகிறார்.

கர்த்தாவே நீர் என் கேடகமும், என் மகிமையும், என் தலையை உயர்த்துகிறவருமாயிருக்கிறீர் -சங். 3:3

மேலும் கர்த்தர் சபையின் அவயவங்களாய் இருக்கிற நம் எல்லோரையும் பார்த்து, "நீங்கள் தேவனுடைய ஆலயமாயிருக்கிறீர்கள் என்றும் தேவனுடைய ஆவி உங்களில் வாசமாயிருக்கிறார் என்றும் அறியாதிருக்கிறீர்களா.. ஒருவன் தேவனுடைய ஆலயத்தை கொடுத்தால் அவனைத் தேவன் கெடுப்பார் தேவனுடைய ஆலயம் பரிசுத்தமாயிருக்கிறது. நீங்களே அந்த ஆலயம்" (1கொரி. 3:16 – 17) என்கிறார். எனவே கர்த்தர் வாசம் செய்யும் ஆலயமாய்; ஆலயத்தின் அவயவங்களாய் இருக்கிற நாம் நமக்குள்ளே மேன்மை பாராட்டி மேட்டிமையாய் செயல்படுவது கர்த்தருக்கு பிரியமாய் இருக்காதே.

நீங்கள் கிறிஸ்துவினுடையவர்கள்; கிறிஸ்து தேவனுடையவர் (1கொரி. 3:23) என்ற வசனத்தின்படி நாம் தேவனுடையவர்களாய் இருக்கிறபடியால் தேவனுக்கு பிரியமானதை செய்து; தேவன் வாசம் செய்யும் ஆலயமாக நாம் எல்லோரும் வாழ்வதே நம் தேவனுக்கு ஏற்றதும் உகந்ததுமாக இருக்கும். "நாமே திருச்சபை கிறிஸ்துவின் திரு உடல் ஒவ்வொருவரும் தனித்தனி உறுப்புக்கள்" என்ற தேவ மனிதனின் பாடலையும் வசனத்தையும் உணர்ந்து தேவனுடைய நாமம் மகிமைப்படும்படியாய் வாழ்வோம். அப்படியான பாதையிலே தேவ சிந்தனையிலே கர்த்தரே நம்மை நடத்திச் செல்வாராக. தேவனுக்கு ஸ்தோத்திரம் உண்டாவதாக.

கிறிஸ்துவின் அன்பில்

சகோ. ஜெகநாதன்

---

**நமது சபையின் மூலமாகத் தாங்கப்படும் இந்திய தேச ஊழியர்கள், அவர்களுடைய ஊழியங்களுக்காக ஜெபித்துக்கொள்ளுங்கள்...**

**இந்த ஊழியங்களை அறிய, தங்களுடைய நன்கொடைகளினால் தாங்க விரும்புவோர் தொடர்பு கொள்ளவேண்டிய பொறுப்பாளர்.**

**சகோ. சிவகுமார் _ போன்: 94494541**

---

**நமது சபையின் மூலமாகத் தாங்கப்படும் திக்கற்ற பிள்ளைகள், அந்த ஸ்தாபனங்களுக்காக ஜெபித்துக்கொள்ளுங்கள்...**

**இந்த ஊழியங்களை அறிய, தங்களுடைய நன்கொடைகளினால் தாங்க விரும்புவோர் தொடர்பு கொள்ளவேண்டிய பொறுப்பாளர்.**

**சகோ. ரவிஜான் பீட்டர் _ போன்: 65507092**

# உன்னை உயர்த்துவார்

பிரியமானவர்களே! லூக்கா 18 —ம் அதிகாரம் 9 — 14 வசனங்களை தியானிக்கும் பொழுது இயேசு நம் ஜெபங்களிலே சில மாற்றங்களை எதிர்பார்க்கிறார் என்பதை நாம் உணர்ந்து கொள்ள முடிகிறது. உதாரணமாக பரிசேயனுடைய ஜெபத்தைப் பார்க்கின்ற பொழுது அவன் விபச்சாரம், பரியாசம், அநியாயம் செய்யாதவனாக மட்டுமல்லாமல் வாரத்தில் இரண்டு நாட்கள் உபவாசிக்கிறவனாகவும் தவறாமல் தசமபாகம் செலுத்துகிறவனாகவும் இருந்தான். அவைகள் மிக நல்லதும் அவசியமானதும் கூட. ஆனால் அவன் செய்த தவறு அல்லது உணராதது என்னவென்றால் மற்றவர்களைக் குற்றப்படுத்துகிறவனாகவும் தன்னை அதிக நீதிமானாகவும் எண்ணினான் என்பதுதான். அதற்கு மேலாக மனத்தாழ்மை என்பது சிறிதும் அவனிடமில்லாதிருந்தது. ஆகவேதான் அவன் ஜெபங்கள் கூட கேட்கப்படவில்லை என்பதையும் நாம் புரிந்து கொள்ளமுடிகிறது.

ஆனால் ஆயக்காரனோ தூரத்திலே நின்று தன் கண்களையும் வானத்துக்கு ஏறெடுக்கத் துணியாமல் தன் மார்பிலே அடித்துக் கொண்டு தேவனே! பாவியாகிய என்மேல் கிருபையாயிரும் (லூக். 18:13) என்று ஜெபித்தான். இப்படி தன்னை தாழ்த்தி தேவ கிருபைக்காக ஜெபிக்கிறதை காணமுடிகிறது. இதனால் இவனே நீதிமானாக தேவ சமுகத்தில் காணப்பட்டான் அவன் ஜெபமும் கேட்கப்பட்டது.

"நாம் எப்படி ஜெபிக்கிறோம்" என்று நம்மை நாமே தேவனுக்கு முன்பாக நிறுத்திப் பார்ப்பது நலமாயிருக்கும். பரிசேயனைப் போல ஜெபிக்கிறோமா அல்லது ஆயக்காரனைப் போல ஜெபிக்கிறோமா! "நமக்குள் பாவமில்லையென்போமேயானால் நம்மை நாமே வஞ்சிக்கிறவர்களாயிருப்போம்" (Iயோவா. 1:8) என வேதம் கூறுகிறது. ஆகவே இவ்வளவு காலம் மேலே உள்ள சத்தியத்தை உணராதவர்களாக அல்லது அறியாதவர்களாக இருந்திருப்போமேயானால் இனிவரும் காலங்களில் நம்மை தேவனுக்கு முன்பாக தாழ்த்தி ஜெபிப்போம். அந்த பரிசேயனைப்போல மற்றவர்களை குற்றம் சாட்டிக்கொண்டும் தன்னை அதிக நீதிமானாக எண்ணிக் கொண்டும்; மனத்தாழ்மை இல்லாமலும் ஜெபிக்க வேண்டாம்.

மாறாக நம்மை தாழ்த்துவோம் அப்போது தேவன் நம்மை உயர்த்துவார். "தன்னைத் தாழ்த்துகிறவன் உயர்த்தப்படுவான்" (லூக். 18:14) என்றும் "தாழ்மையுள்ளவர்களுக்கோ கிருபை அளிக்கிறார்" (Iபேது. 5:5) என்றும் கர்த்தர் "உயர்ந்தவராயிருந்தும் தாழ்மையுள்ளவனை நோக்கிப் பார்க்கிறார்" (சங். 138:6) என்ற ஜீவனுள்ள வசனங்களின்படி நம்மை நாம் தாழ்த்தும் பொழுது தேவன் நம்மை உயர்த்துவார் என்பது உறுதி பிரியமானவர்களே. மேலும் "கர்த்தருடைய கிருபையோ அவருக்கு பயந்தவர்கள் மேலும் அவருடைய நீதி அவர்கள் பிள்ளைகளுடைய பிள்ளைகள் மேலும் அநாதியாய் என்றென்றைக்கும் உள்ளது" (சங். 103:17) என்ற தேவ வசனத்தின்படி நம்மையும்

உம்மை நம்புகிறவர்கள் யாவரும் சந்தோஷித்து, என்நாளும் கெம்பீரிப்பார்களாக. –சங். 5:11

நம் பிள்ளைகளையும் பிள்ளைகளின் பிள்ளைகளையும் தேவன் தரும் ஆசீர்வாதம் தொடரும் என்பதில் சற்றும் சந்தேகமில்லை. கர்த்தர் தாமே நம் ஒவ்வொருவரையும் ஆசீர்வதிப்பாராக. ஆமென்.

கிஸ்துவுக்குள் சகோதரி
ஜெயக்கொடி ஜாண்வெஸ்லி

# வேத புத்தகம்




வேத புத்தகம் ஒரு அதிசய பொக்கிஷம்
வெள்ளி பசும் பொன்னிலும் விலையேறப் பெற்ற ஒளஷதம்
வேத வசனங்கள் என் மனமகிழ்ச்சி —அதன்
விளக்கங்கள் என் உயிர் மீட்சி

வேதம் கால்களுக்கு தீபம் —அது என் வாழ்வின்
பாதைக்கு வெளிச்சம்
பேதமை நீக்கும் மருந்து —பேதையை
ஞானியாக்கும் நல் விருந்து

வாலிபன் இதயத்தில் உணர்வை தந்து
வழுக்கி விழாமல் தாங்கிடச் செய்யும்
இளமையில் வேதத்தை நீ சுமந்தால் —முதிர்
வயதினில் வேதம் உனை சுமக்கும்

அதிசயங்கள் சாட்சிகள் ஆயிரம் உண்டு
தினமும் தியானித்தால் ஆசி உண்டு
வசனங்களை உட்கொள்வதே என் ஆறுதல்
என் சிறுமையில் என்றும் அதுவே தேறுதல்

வேதத்தை வெறுப்பவனும் ஏற்றுக் கொள்வான்
வேத புத்தகத்தை எதிர்ப்பவனும் அப்போஸ்தலனாவான்
காலத்தால் அழியாது எக்காலமும் ஒழியாது
மாறாத நம் இயேசுவே வார்த்தையாய் இருப்பதால்.

**- ஸ்டாலின்**

# ஆராதனை ஆராதனை

கிறிஸ்துவுக்குள் அன்பான தேவ பிள்ளைகளே! தேவன் தம் சொந்த குமாரனை பூமிக்கு அனுப்பி மனுக்குலத்திற்கு மீட்பின் வழியை தந்ததின் முக்கிய பிரதான நோக்கமே நாம் ஜீவனுள்ள தேவனாகிய கர்த்தரை ஆராதிப்பதற்காகத்தான். துதிப்பதற்கென்றும் ஆராதிப்பதற்கென்றும் தேவன் லூசிபர் என்ற தூதனை ஏற்படுத்தி இருந்தார். ஆனால் அவனுடைய மேட்டிமையினால் ஆராதனைப் பொறுப்பிலிருந்து தள்ளப்பட்டான். அவனோடு அவனுக்கு துணைபுரிந்த தூதர்களும் தள்ளப்பட்டார்கள். அவர்கள் தான் "சாத்தான்" என்றும் "பிசாசு" என்றும் அழைக்கப்படுகின்றனர் (எசே. *28:13 – 15*).

லூசிபரும் அவன் கும்பலும் தள்ளப்பட்ட பிறகு துதிப்பதற்கு பூமியிலே தேவன் தம்முடைய சாயலில் மனிதனைப் படைத்து தமக்கு அவன் கீழ்ப்படிந்திருந்து தம்மை ஆராதிக்க வேண்டும் என்று, தான் சிருஷ்டித்தவைகளை எல்லாம் மனிதனுக்குக் கீழ்ப்படுத்தினார். அதற்கு பிறகு உண்மையாய் உத்தமமாய் தன்னை ஆராதித்து தமக்கு பலி செலுத்துகிறவர்களை தேவன் ஆசீர்வதித்து அவர்களை நேசிக்கத் தொடங்கினார். அவர்களோடு முகமுகமாய் பேச ஆரம்பித்தார் நடத்தினார். ஆபேல், சேத், நோவா, ஏனோக்கு போன்றவர்கள் தேவனை ஆராதித்தார்கள். ஆபிரகாம் போகும் இடமெல்லாம் பலிபீடத்தைக்கட்டி தேவனை ஆராதித்து தொழுது கொண்டான் என்று வேதத்தில் வாசிக்கின்றோம். தாவீது துதிக்கு இலக்கணம் வகுத்தவர். சங்கீதங்களைப் பாடிப்பாடி ஆண்டவரை ஆராதித்து மகிழ்ந்தார். எல்லா நேரத்திலும் ஆண்டவரை மகிமைப்படுத்தினார்.

மீண்டும் மீண்டும் மனிதன் பாவத்தில் வீழ்ந்து தேவ மகிமையற்றவர்களாய் மாறினதால் பாவத்தின் அடிமைத்தனத்தலிருந்து தேவன் மனுக்குலத்தை மீட்க வேண்டியதாயிருந்தது. அதற்கு ஒரே விலையாக இயேசுவை மனித குலத்தின் பாவத்திற்காக தேவன் ஒப்புக்கொடுத்தார். இந்த இயேசு கிறிஸ்துவின் மூலமாய் நமக்கு மீட்பு, இரட்சிப்பு கிடைத்திருக்கிறது. நாமும் மீட்கப்பட்டிருக்கிறோம் என்ற நிச்சயம் நமக்கிருந்தால் முதன்மையாக நாம் செய்ய வேண்டியது, "நம் தேவனாகிய கர்த்தரை ஆராதிப்பது" ஒன்றே. "இரட்சிப்பின் பாத்திரத்தை எடுத்துக் கொண்டு கர்த்தருடைய நாமத்தை தொழுது கொள்ளுவேன்" (சங். *116:13*) "நான் உமக்கு ஸ்தோத்திரபலியை செலுத்தி கர்த்தருடைய நாமத்தை தொழுது கொள்ளுவேன்" (சங். *116:17*) என்று தேவனை தொழுது கொள்ளும் முறையையும் வேத வசனம் நமக்கு கற்றுத் தருகிறது. நாமும் நம் ஜீவனுள்ள தேவனாகிய கர்த்தரை ஆராதிப்போம்; ஆராதிக்கிறவர்களாய் வாழ்வோம். கர்த்தர் தாமே நம்மையும் ஆராதனை வீரர்களாக மாற்றுவாராக. ஆமென்.

கிறிஸ்துவின் பணியில்
சகோ. தாமஸ் இரவிந்திரன்

**நீதியுள்ளவராயிருக்கிற தேவரீர் இருதயங்களையும் உள்ளிந்திரியங்களையும் சோதிக்கிறவர்** -சங். 7:9

# மாயை

"இளவயதும் வாலிபமும் மாயையே" (பிர. 11:10) என்று வேதத்தில் வாசிக்கின்றோம். எல்லோரும் வாலிப வயதை கடந்து வந்தவர்கள்தான். முதிர் வயதில் தன்னுடைய கடந்த கால வாழ்வை நினைத்து வருத்தப்படுவதற்கு காரணம்... கர்த்தரை நினைக்காமல் கண்போன போக்கிலும், கால்போன போக்கிலும், மனம் போன போக்கிலும் வாழ்ந்து சுகித்திருந்ததுதான். அவைகளை பின்பு நினைத்துப் பார்க்கையில் அங்கே வெறுமை இருந்தது; மாயை நம்மை சூழ்ந்திருந்தது என்பதை இப்பொழுது நம்மால் புரிந்து கொள்ளமுடிகிறது.

"நீ உன் வாலிப பிராயத்திலே உன் சிருஷ்டிகரை நினை" (பிர. 12:1) என்று வேதம் நமக்கு கற்றுத் தருகிறது. முதிர்ந்த வயதில் தீவிரமாக எல்லாரும் சிருஷ்டிகராகிய தேவனை நினைப்பார்கள்; தேடுவார்கள். அதற்கு காரணம் ஆட்டமெல்லாம் முடிந்து எல்லாரும் கைவிடப்பட்ட நிலையில் இருப்பார்கள். அப்பொழுது கர்த்தரை அங்கும் இங்கும் எங்கும் தேடுவார்கள். இந்த நிலையில் தேடும் பொழுது அதிக மேன்மை இல்லை. மாறாக வசனத்தின்படி வாலிப பிராயத்திலே, கர்த்தரை அறிந்த நாள் முதல் சிருஷ்டிகரோடு வாழவேண்டும்; வளரவேண்டும்.

"தேவனுக்கு பயந்திருப்பவர்கள் நன்றாயிருப்பார்கள்" (பிர. 5:7, பிர. 8:12) என்றும் "ஆண்டவருக்கு பயப்படுவதே ஞானம் பொல்லாப்பை விட்டு விலகுவதே புத்தி" (யோபு. 28:28) என்றும் வேதம் நமக்கு போதித்திருக்கிறதே. இளவயதில் மிகுந்த ஆர்வம் இருக்கும் பயமிருக்காது. அதனால்தான் சாலொமோன் ராஜா இளமையில் ஆட்டம் போட்ட அனுபவத்தில் சொல்கிறார் "எல்லாம் மாயை மாயை" என்று. அவர் பிரசங்கி புத்தகத்தை தொடங்கும் பொழுதே மாயை என்றுதான் தொடங்குகிறார். அநேகருக்கு ஆரம்பத்தில் தேவனிடமிருந்த பயம் வசதி வாய்ப்புகள் பெருகினபோது இருப்பதில்லை. ஏனென்றால் மாயை மனதை மூடிக்கொள்கிறது.

சங். 25:12 சொல்லுகிறது "கர்த்தருக்கு பயப்படுகிற மனுஷன் எவனோ அவனுக்கு தாம் தெரிந்து கொள்ளும் வழியை போதிப்பார்" என்று. சாத்ராக், மேஷாக், ஆபெத் நேகோ, தானியேல் இவர்கள் மாயையான உலகிற்கு தம்மை அடிமையாக்காமல் கர்த்தருக்கு பயந்து நடந்தார்கள். அவர்களை கர்த்தர் உயர்த்தினார். நாமும் மாயையான பாவத்தில் விழுந்து மாளாதபடிக்கு தேவனுக்கு பயந்து அவருடைய கட்டளை யைக் கைக்கொண்டால் நித்திய ஜீவனை அடையலாம். "வாலிபனே உன் இளமையிலே சந்தோஷப்படு. உன் வாலிப நாட்களில் உன் இருதயம் பூரிப்பாக்கட்டும்; உன் காட்சிகளிலும் நட ஆனாலும் இவை எல்லாவற்றினிமித்தமும் தேவன் உன்னை நியாயத்திலே கொண்டு வந்து நிறுத்துவார் என்று அறி" (பிர. 11:9) என்ற வசனத்தின்படி மாயையான உலகத்திற்கு அடிமையாகி தேவ மகிமையை இழந்து விடாதபடி, மாயையை வெறுத்து நீதியில் வாழ்வோம்; நிலைத்திருப்போம். உன்னத வாழ்வை சுதந்தரிப்போம். தேவன் தாமே நமக்கு உதவி செய்வாராக. ஆமென்.

கர்த்தரின் அன்பில்
சகோ. சுகுமார்

எங்கள் ஆண்டவராகிய கர்த்தாவே, உம்முடைய நாமம் பூமியெங்கும் எவ்வளவு மேன்மையுள்ளதாயிருக்கிறது -சங். 8:9

# இந்த மாதம் பிறந்த நாளை சிறப்பிக்கிறவர்கள்




- செல்வி. பிரவீனா ரஞ்சிதம் ராஜாசிங்
- செல்வி. லிடியா ஆரோக்கியதாஸ்
- செல்வி. சாராள் சத்தியநாதன்
- செல்வி. தீபா ராஜன்
- செல்வி. பிளஸ்சி பியூலா வில்சன்
- செல்வி. ரின்சி வேளாங்கண்ணி
- செல்வன். கிதியோன் செங்குட்டுவன்
- செல்வன். அமீஸ்
- செல்வன். ஞானசிகாமணி ஆசீர்வாதம்
- செல்வன். மிருதுன்ராஜ் சதீஷ்குமார்
- செல்வன். விக்டர் செங்குட்டுவன்
- செல்வன். ஜாண் ஜோஸ்வா மில்லர்
- செல்வன். கெவின் அஸ்ரேய் ஆரோக்கியராஜ்
- சகோதரி. சவரியம்மாள் சத்தியநாதன்
- சகோதரி. ஜரின் நிஷா கிரன்குமார்
- சகோதரி. மெர்லின் ரோஸ் ஷீலா
- சகோதரி. ஜாய் மெற்றில்டா டேனியல்
- சகோதரி. செலின் சோபினா மேரி டேவிட்ஜெயகுமார்
- சகோதரி. ஷீலா இன்பராணி பக்தராஜ்
- சகோதரி. அமுதா சுகுமாரன்
- சகோதரி. ஜரின் ஜோசப்
- சகோதரி. பெர்னத் அல்ஜியா மேரி தாமஸ்
- சகோதரி. மரியா ஜாண்போஸ்கோ
- சகோ. ஆல்பர்ட் சிங்
- சகோ. மணிராஜ்
- சகோ. பிரான்னி ராகேஸ்

# இந்த மாதம் திருமண நாளை சிறப்பிக்கிறவர்கள்



- திருமதி & திரு. ஜோசப் பாபுராஜ்
- திருமதி & திரு. ஜேம்ஸ்
- திருமதி & திரு. வில்சன் செல்லையன்
- திருமதி & திரு. ஜாண் பீட்டர்
- திருமதி & திரு. விசு
- திருமதி & திரு. ராஜா ரவிச்சந்திரன்
- திருமதி & திரு. ஜேம்ஸ் மரியஞானம்
- திருமதி & திரு. டேனியல் மாணிக்கம்
- திருமதி & திரு. ரவிஜாண் பீட்டர்
- திருமதி & திரு. அற்புதராஜ்
- திருமதி & திரு. ஃபிராங் வில்லியம்
- திருமதி & திரு. மார்க் ஆன்றனி
- திருமதி & திரு. ஃபிராங்கிளின்

உமது நாமத்தை அறிந்தவர்கள் உம்மை நம்பியிருப்பார்கள். _சங். 9:10

# செப்டம்பர் 2012 ஆலய ஆராதனைகள்

ஞாயிறு ஆராதனை மாலை 5:00 முதல் 6:15 வரை

| நாள் | செய்தி |
|---|---|
| 02-09-2012 | **சகோ. ஜஸ்டின் சுந்தரராஜ்** |
| 09-09-2012 | **சகோ. விசு** |
| 16-09-2012 | **சகோ. ஜசக்துரை** |
| 23-09-2012 | **சகோ. கிறிஸ்டோபர்** |
| 30-09-2012 | **சகோ. ஜெகநாதன்** |

வெள்ளி ஆராதனை மாலை 4:40 முதல் 6:20 வரை

| நாள் | நடத்துபவர் | செய்தி |
|---|---|---|
| 07-09-2012 | **சகோ. ஜசக்துரை** | **சகோ. பிரேம்குமார்** |
| 14-09-2012 | **சகோ. ஜெயசேகர்** | **சகோ. ஸ்டாலின்** |
| 21-09-2012 | **உபவாச திருவிருந்து ஆராதனை** | |
| 28-09-2012 | **குடும்ப ஆராதனை** | |

சங்கிலி தொடர் ஜெபம்: 06-09-2012 மாலை 6 மணி முதல் காலை 6 வரை

முழு இரவு ஜெபம்:13-09-2012 இரவு 11 மணி முதல் காலை 3 மணிவரை

---

வாலிபர் கூடுகை: 28-9-2012, Br. ரவி ஜாண் பீட்டர் இல்லம், மங்காஃப்

பெண்கள் கூடுகை: 05.09.2012, Sis. அனிதா ஆரோக்கியதாஸ் இல்லம், ஃபாஹாகீல்

கர்த்தர் சதாகாலங்களுக்கும் ராஜாவாயிருக்கிறார். -சங். 10:16

# *8 - Ways to Pray For Your Spouse*

***"Grow in the grace and knowledge of our Lord and Saviour Jesus Christ. To him be glory both now and forever"***

***(II Peter 3:18)***

1. *Pray Jesus will bless your spouse today in some unexpected way.*
2. *Pray Jesus will allow you to be a source of joy to your spouse today.*
3. *Pray Jesus will soften (or) keep soft his heart towards you and others.*
4. *Pray Jesus will heal the hurts from his past, Let him forgive and give him peace.*
5. *Pray Jesus will keep your spouse from all harm this day.*
6. *Pray Jesus will allow him to use all the gifts and talents He gave him.*
7. *Pray Jesus will rule on the throne of his heart this entire day.*
8. *Pray Jesus will fulfill every intention he has for his life for the Glory of God.*

***"As for me, far be it from me that I should sin against the Lord by failing to pray for you" (I Samuel 12:23)***

**In Jesus Christ**
**Sis. Priscilla Amos**

## *BREAKING NEWS*

**நமது சபையின் website –ல் நம் சபையில் நடந்த பல நிகழ்வுகளின் புகைப்படங்கள் (Photos), காண் ஒளி காட்சிகள் (Video), மாத இதழ், செய்திகள்... இன்னும் பல நிகழ்வுகள் வெளியிடப்படுகிறது. மாதம் தோறும் புதிப்பிக்கப்படுகிறது. உங்களையும் நீங்கள் அதில் காணலாம். இன்னும் இந்த ஊழியம் மேன்மையடைய உங்கள் ஆலோசனைகளையும் கருத்துக்களையும் அன்புடன் அறிவியுங்கள்.**

**அதற்கு அணுகுக:**

**சகோ. பால் பாண்டிய ராஜ்**
**கை பேசி எண்:** 66594586

**Church website: www.ahmaditamilcongregation.org**

கர்த்தர் நீதியுள்ளவர், நீதியின் மேல் பிரியப்படுவார் _சங். 11:7




## பொருத்துக: பொருத்தமான பரிசுகளுண்டே

(தயவு செய்து எல்லாவற்றிலும் அதிகாரம் மற்றும் வசனம் ஆகியவற்றை மறக்காமல் குறிப்பிடவும்)

| | | |
|---|---|---|
| 1. பூமியும் அதின் நிறைவும் | _ | அன்பு கூறுவது. |
| 2. மரணத்தின் கூர் | _ | நன்மை செய் |
| 3. நிறைவானது வரும்போது | _ | உண்மையுள்ளவர் |
| 4. விளையச் செய்தவர் | _ | கர்த்தருடையது |
| 5. ஏவாளை வஞ்சித்தது | _ | குறைவானது ஒளிந்துபோம் |
| 6. தீமையை வெல்ல | _ | சர்ப்பம் |
| 7. கர்த்தரின் ஆவி | _ | விசுவாசம் |
| 8. அழைத்த தேவன் | _ | விடுதலை |
| 9. ஆறுதலின் மகன் | _ | யோசே |
| 10. கடன்படு | _ | தேவன் |
| 11. அடித்துப் புசி | _ | பாவம் |
| 12. நீதிமான் பிழைப்பான் | _ | சாட்சிகள் |
| 13. அந்தியோகியா | _ | ஐதிகு |
| 14. இறந்தவன் உயிரடைந்தான் | _ | கிறிஸ்தவர்கள் |
| 15. பரிசுத்த ஆவி | _ | பேதுரு |

இச்சகம் பேசுகிற எல்லா உதடுகளையும், பெருமைகளைப் பேசுகிற நாவையும் கர்த்தர் அறுத்துப் போடுவார் _சங். 12:3

குறிப்பு:_ வேதாகமத்தில்... அப்போஸ்தலர் நடபடிகள், ரோமர், I கொரிந்தியர் மற்றும் IIகொரிந்தியர் ஆகிய நிருபங்களில் பதிலைத் தேடுங்கள்; காணலாம். சரியான விடைகளை வருகிற 21-9-2012 _ம் தேதிக்குள் சபையின் செயலாளரிடம் நேரில் தெரிவிக்கவும்.

# தோமாவின் இரத்த சாட்சி

இயேசுவின் பன்னிரண்டு சீஷர்களின் ஒருவரான தோமா கலிலேயா கடலில் மீனவராக இருந்தவர். தோமா என்பதின் அர்த்தம் ஓர் இரட்டை என்பதாகும். தோமாவின் உண்மையான பெயர் யூதா. தோமா எப்பொழுதும் துக்கமுள்ள தன்மையுடையவனாக காணப்பட்டார். அடிக்கடி உடல் நல குறைவினால் பாதிக்கப்பட்டார். இவர் விசுவாசமும் துணிவும் உடையவனாக காணப்பட்டாலும் தோல்வி மனப்பான்மையுடையவன். ஒருமுறை கர்த்தராகிய இயேசுகிறிஸ்து லாசருவைப் பார்க்க யூதேயாவுக்கு போக தீர்மானித்தபோது அங்கு சென்றால் அவரது உயிருக்கு ஆபத்தாகி விடுமோ என்று எண்ணி சீஷர்கள் தயங்கினார்கள். ஆனால் மரித்து போன லாசருவை காணவேண்டும் என்று இயேசு திட்டவட்டமாக சொல்லிவிட்டார். அப்போது தோமா "அவரோடுகூட மரிக்கும்படி நாமும் போவோம் வாருங்கள்" என்று சீஷர்களையும் கூப்பிடுகிறார். அதாவது இயேசுவோடு செல்லும் போது மரணம் ஏற்பட்டாலும் பரவாயில்லை அவருடனே செல்ல வேண்டும் என்ற வாஞ்சை அப்போது இருந்தது, ஆனால் இயேசு பிரதான ஆசாரியராலும் மூப்பராலும் கைது செய்யப்படும்போது மற்ற சீஷர்களை போல தோமாவும் ஓடிவிட்டார். தன் குருவோடு சேர்ந்து சாவதற்கு போதுமான துணிவும், தைரியமும் இல்லாமல் போயிற்று.

உலகத்தில் அநேக சமயத்தலைவர்கள் தோன்றினார்கள். பின்பு ஒரு நாள் மரித்து போகிறார்கள். அதோடு அவர்கள் சரித்திரம் முடிந்துவிடுகிறது. இயேசுவும் அதேபோல ஒரு நல்ல தலைவர்; நாம் அவரை பின்பற்றினோம். எதிர்பாராத மரணத்தினால் நாம் அவரை இழந்து விட்டோம். அவருடைய சரித்திரம் இதோடு முடிந்துவிட்டது என்று தோமா சில நாட்கள் இயேசுவின் சிலுவை, கல்லறை இவற்றை நினைத்து மனத்தளர்ச்சியடைந்து துக்கங் கொண்டான். பிறகு மீன்பிடிப்பதற்கே சென்றுவிட்டான். ஆனால் உயிர்தெழுந்த நம்முடைய தேவனாகிய இயேசு கிறிஸ்து முதல் முதலாக மகதலேனா மரியாளுக்கு தரிசனமானார்; இரண்டாவது எம்மாவூர் சீஷர்களுக்கு தரிசனமானர்; மூன்றாவதாக தோமாவை தவிர மற்ற *10* சீஷரும் ஒரு வீட்டில் இருந்தார்கள் அப்போது அவர்கள் நடுவே தரிசனமானார். இவர்கள் அனைவரும் இயேசு உயிர்த்தெழுந்தார் என்று சொல்லியும் நம்பவில்லை. அவருடைய சீஷர்கள் எவ்வளவோ சொல்லி பார்த்தார்கள். ஆனால் தோமாவோ அவருடைய கைகளில் ஆணிகளினாலுண்டான காயத்தை நான்கண்டு, என் விரலை கையை அவருடைய விலாவிலுண்டான காயத்திலே போட்டாலொழிய விசுவாசிக்கமாட்டேன் என்று ஒரேயடியாக மறுத்துவிட்டார். அவருக்கு எட்டு நாட்கள் தருணம் கொடுக்கப்பட்டது. ஆனாலும் தோமாவின் அவிசுவாசம் மாறவேயில்லை. எட்டு நாட்களுக்குப் பிறகு மற்ற சீஷர்களோடு தோமாவும் இருக்கும்போது இயேசு அவர்கள் நடுவே வந்தார். தோமாவை பார்த்து "நீ உன் விரலை இங்கே நீட்டி என் கைகளைப் பார், உன் கையை நீட்டி, என்விலாவிலே போடு, அவிசுவாசியாயிராமல் விசுவாசியாயிரு" என்றார் இயேசு. அவ்வளவு தான் தோமாவில் ஒரு மாபொரும் மாற்றம். அவரது

அவிசுவாசமும், விரக்தியும் அவரை விட்டு மறைந்துபோனது. அவர் உயிர்தெழுந்த கர்த்தராகிய இயேசுவின் கைகளில் ஒரு புது மனிதனாக அதாவது ஒரு புதிய அப்போஸ்தலனாக உருப்பெற்றார். தோமா ஆண்டவரை பார்த்து என் ஆண்டவரே! என் தேவனே! என்று ஒரு உன்னதமான விசுவாச அறிக்கை செய்தான். இயேசு தோமாவைப் பார்த்து நீ என்னை கண்டதினால் விசுவாசித்தாய் என்னை காணாமலே விசுவாசிக்கிறவர்கள் பாக்கியவான்கள் என்றார். உயிர்த்தெழுந்த இயேசுவை அன்று சில ஆயிரகணக்கான மக்கள் கண்டார்கள். இன்று சொல்லிமுடியாத பலகோடிக்கணக்கான மக்கள் இயேசுவை விசுவாசகண்களால் கண்டுள்ளார்கள். அதனால் தான் நம்முடைய விசுவாசத்தை வேதம் சொல்லுகிறது எபி. *11:1* —ல் "விசுவாசமானது நம்பப்படுகிறவைகளின் உறுதியும், காணப்படாதவைகளின் நிச்சயமுமாயிருக்கிறது" என்று. கண்டு விசுவாசிக்கறவர்களை காட்டிலும் காணாமால் விசுவாசிக்கிறவர்கள் பாக்கியவான்கள் என்று இயேசுவும் தெளிவுப்படுத்தினார்.

ஒரு நாள் அப்போஸ்தலர்கள் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் கட்டளையை நினைப்பதற்காக ஒன்று கூடினார்கள். இயேசுகிறிஸ்து கடைசியாக சொன்ன "நீங்கள் உலகமெங்கிலும் எனக்கு சாட்சிகளாயிருப்பீர்கள்" என்பதை எண்ணினார்கள். ஆகையால் உலகத்தை பல பாகங்களாக பிரித்தார்கள் யார்யார் எந்தெந்த பகுதிக்கு போவது என்று சீட்டு போட்டார்கள். இந்தியா சென்று பணியாற்ற வேண்டும் என்று தோமா பெயருக்கு சீட்டு விழுந்தது. தோமாவுக்கோ இந்தியாவுக்கு வருவதற்கு கொஞ்சமும் விருப்பமில்லை உடனே தோமா மற்ற சீஷர்களைப் பார்த்து நான் ஒரு எபிரேயன் நான் இந்தியரிடம் சென்று உண்மையான செய்தியை எப்படி அறிவிப்பேன். அவர்கள் என்னை ஏற்றுக்கொள்ள மாட்டார்கள் நான் உடல் நல குறைவுள்ளவன், இவ்வளவு நீண்ட தூ ர பயணம் செய்து என்னுடைய கடமையை நிறைவேற்ற அதற்குரிய கருவிகளும் என்னிடம் இல்லை. இந்தியர்களை பற்றி நான் கேள்விப்பட்டிருக்கிறேன் அவர்கள் காட்டுவாசிகள் நாகரீகமற்றவர்கள் நீங்கள் உலகில் எந்த நாட்டிற்கு வேண்டுமானாலும் என்னை அனுப்புங்கள். ஆனால் நான் இந்தியாவுக்கு மட்டும் போகமாட்டேன் என்று உறுதியாக கூறிவிட்டார். அன்று இரவு இயேசு தோமாவுக்கு காட்சி கொடுத்து தோமாவே பயப்படாதே நீ இந்தியாவுக்கு போ; நற்செய்தியை அறிவி. என் அருள் உன்னோடு இருக்கும் என்றார் ஆனால் தோமா இன்றும் நம்பாமல் பிடிவாதமாக நீங்கள் என்னை வேறு எங்கே அனுப்பினாலும் அனுப்புங்கள். ஆனால் இந்தியாவுக்கு மட்டும் போக மாட்டேன் என்று உறுதியாக கூறிவிட்டார்.

ஒருநாள் இயேசு தோமாவை அங்காடி பகுதிக்கு அழைத்து சென்றார். அப்போது இயேசுவிடம் ஒரு வணிகன் வந்து நான் இந்தியாவில் வரலாற்று சிறப்புமிக்க அரசனான குந்தாபோரஸ் (Gundaphorus) என்ற மன்னரிடமிருந்து வருகிறேன். எங்கள் நாட்டு மன்னருக்கு ஒரு அரண்மனை கட்டுவதற்கு கைதேர்ந்த ஒரு தச்சுவேலை தெரிந்த

ஒருவர் எனக்கு வேண்டும் என்று கேட்டான். உடனே இயேசு வணிகனிடம் என்னிடம் ஒரு தச்சன் இருக்கிறான் நீ அவனை கொண்டு செல் என்று தோமாவை அவனிடம் கொடுத்தார். வணிகன் தோமாவிடம் இயேசுவை காட்டி அவர் உன் தலைவரா என்று கேட்டான். உடனே தோமா இவர்தான் என் தலைவர் நான் இவருக்கு அடிமை என்றான். இந்த வணிகனின் பெயர் அப்பன்ஸ் இவன் பஞ்சாப்பை சேர்ந்தவன். அப்பன்ஸ் தோமாவிடம் உனக்கு என்னவேலை தெரியும் என்று கேட்டான். தோமா எனக்கு கலப்பை, நுகத்தடி, முட்கோல், படகுகள், துடுப்புகள், கப்பல்கள், இராட்டினங்கள், கல்தூண் ஆகியவை செய்யத் தெரியும். ஆலயங்கள், அரண்மனைகள் கட்டதெரியும் என்றான். அப்பன்ஸ் மிக்க மகிழ்ச்சியடைந்தான். உடனே விற்பனை பத்திரம் எழுதப்பட்டது. தோமா மூன்று லிட்டர் வெள்ளி பணத்திற்கு விற்கப்பட்டார். தோமா ஆண்டவரை பார்த்து ஆண்டவரே உம்முடைய சித்தத்தை செய்ய நான் இந்தியாவுக்கு போகிறேன் என்று சமாதானத்தோடு இந்தியாவுக்கு வந்தார்.

அப்பன்ஸ் தோமாவை பஞ்சாப்பில் உள்ள குந்தாபோரஸ் மன்னனிடம் அழைத்துச்சென்றான். அங்கு அரண்மனை கட்டுவதற்கு தேவையான பொருட்களும், வரைபடமும், போதுமான பணமும், உணவுப் பொருட்களும் கொடுக்கப்பட்டது. அரண்மனை கட்டுவதற்காக மரங்களும், தண்ணீரும் கிடைக்ககூடிய நல்ல இடமும் கொடுக்கப்பட்டது. தோமா சுற்றிலும் இருக்கிற கிராமங்களுக்கும் நகர்புறத்திற்கும் சென்று சுவிஷேசத்தை அறிவித்தார். அநேகர் மனம் மாறினார்கள். அப்போது ஏராளமான மக்கள் வறுமையில் வாடுவதை கண்டு, அரசன் அரண்மனை கட்டுவதற்கு கொடுத்த பணத்தையெல்லாம் ஏழை எளிய மக்களுக்கு வழங்கினார். அரசன் அரண்மனையின் வளர்ச்சி அறிந்து வருமாறு ஒருவனை அனுப்பினார். அவன் அரண்மனை கட்டப்படாததை கண்டு தோமாவை பற்றிய அனைத்து செய்திகளையும் அரசனுக்கு அறிவித்தான். அரண்மனை கட்டப்படவில்லை ஆனால் தோமா ஒரு தூய்மையான மனிதர். தொடர்ந்து ஜெபிப்பதிலும் தியானிப்பதிலும் தன் காலத்தை செலவிடுகிறார். ரொட்டியை மட்டும் உண்டு நீரை மட்டும் குடிக்கிறார். சாதாரண எளிய உடையையே அணிகிறார் எல்லா பணத்தையும் ஏழை மக்களுக்கே கொடுத்து விட்டார் என்று அரசனுக்கு அறிவிக்கப்பட்டது.

தோமா அரசன்முன்பாக கொண்டுவரப்பட்டான் அரசன் தோமாவிடம் கண்டிப்பாக நீ அரண்மனை கட்டியாக வேண்டும் என்றான். தோமா அரசனைப்பார்த்து நான் அரண்மனை கட்டி முடித்துவிட்டேன் ஆனால் இப்பொழுது நீர் உம் கண்களால் காணமுடியாது. உம் வாழ்வு முடியும் போது காணமுடியும் என்றான். உடனே அரசன் கடுங்கோபம் கொண்டான். தோமாவையும் அவனை அழைத்து வந்த அப்பன்ஸ்யும் தீயிலிட்டு கொன்று விடுவதுதான் சரியானது என்று சொல்லி இருவரையும் சிறையிலடைத்தான். ஒருநாள் குந்தாபேரரசரின் உடன்பிறந்த சகோதரன் காத் என்பவன் மரணமடைந்தான். தோமா காவலாளியை அழைத்து கடவுள் என்னோடிருக்கிறார் அதனால் அரசனின் சகோதரனை

என்னால் உயிரோடு எழுப்பமுடியும் என்று சொல்ல சொன்னான். காவலாளி அரசனிடம் போய் சொன்னதும் தோமா அழைத்துவரப்பட்டான். தோமா அரசரின் சகோதரனாகிய காத்தை உயிரோடு எழுப்பினான். குந்தா பேரரசு வியந்து போய் விட்டான். உடனே காத் தன்னுடைய அண்ணன் குந்தாவை பார்த்து நான் விண்ணுலகு சென்றேன். அங்கு ஒரு அழகான அரண்மனையை காட்டினார்கள் நான் அந்த அரண்மனைக்கு செல்ல விரும்பினேன் ஆனால் தேவதூதர்கள் என்னை தடுத்துவிட்டு என்னிடம் சொன்னார்கள் உன் சகோதரனாகிய குந்தா பேரரசு ஏழைகளுக்கு கொடுக்க விருப்பமில்லாதவன். இப்போது தோமாவையும் தீயிலிட்டு கொல்ல முடிவு செய்துள்ளான் உன் சகோதரன் தோமாவை ஒன்றும் செய்யாமல் விட்டுவிட்டால் இந்த அரண்மனை உனக்கு சொந்தமாகும்; அதுமட்டுமல்ல தோமா உமக்காய் பலமுறை மன்றாடியுள்ளார் என்று குந்தா பேரரசிடம் காத் சொன்னதும் குந்தா பேரரசு மனந்திரும்பி தோமாவின் கடவுளே என் அறியாமையை மன்னித்து என்னை ஏற்றுக்கொள்ளும் என்று தன்னைத் தாழ்த்தி வேண்டினான். காத் திரளான மக்களுக்கு முன்பாக தோமாவின் பாதத்தில் வீழ்ந்து என் அண்ணன் செய்த குற்றத்தை மன்னிப்பீராக என்று மன்றாடினான். தோமாவே சிரித்த முகத்துடன் அவனை உற்றுநோக்கி அவன் நெற்றியில் முத்தமிட்டு என் மகனே! இறைவனுடைய சமாதானம் உம்மிடம் இருப்பதாக என்று சொல்லி அவனை ஆசீர்வதித்தார். குந்தாபேரரசு மனந்திரும்பி ஊழியத்திற்கு தேவையான எல்லா வசதிகளையும் செய்து கொடுத்தான். அநேகர் மனந்திரும்பி ஞானஸ்நானம் பெற்று கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டார்கள். பிறகு குஷானியரின் படையெடுப்பு காரணமாக அங்குள்ள திருச்சபையில் குருக்களை ஏற்படுத்திவிட்டு சோக்கோற்றிரா என்ற தீவுக்கு சென்றார். பிறகு அங்கிருந்து வகை கப்பல் மூலம் கி.பி. 52 —ல் மலபார் கடற்கரையில் கிரங்கனூ ர் என்ற இடத்தில் வந்து இறங்கினார். அக்காலத்தில் முசிறி என்றழைக்கப்பட்ட இந்த துறைமுகம் கொச்சியின் அருகே இருந்தது. தோமா பாலூர், கிரங்கனூர், பாரூர், கோமஸ்கலம், காயல் நிரணம், கொல்லம், தமிழகத்தில் நெல்லை உட்பட பல இடங்களில் ஊழியம் செய்துவிட்டு அங்கிருந்து கடல் வழியாக சீனா சென்றார். அங்கு சில ஆண்டுகள் ஊழியம் செய்துவிட்டு மீண்டும் இந்தியாவிற்கு வந்து சென்னையில் ஊழியத்தை தொடர்ந்தார்.

சென்னையிலுள்ள மைலாப்பூரில் தோமா ஊழியம் செய்து கொண்டிருந்தபோது காளிக்கோவில் பூசாரிகள் தோமாவை கொல்ல திட்டமிட்டார்கள். அதற்கு மிஸ்தி என்ற அரசனும் உடந்தையாயிருந்தான். தோமா தினமும் சின்னமலை என்ற இடத்திலுள்ள குகை ஒன்றில் ஜெபிப்பது வழக்கம். ஒரு நாள் தோமா வழக்கம் போல் ஜெபித்துக் கொண்டிருக்கும் போது காளிகோவில் பூசாரிகள் தோமாவை ஈட்டியால் குத்திவிட்டு ஓடிவிட்டார்கள். மார்பில் குத்தப்பட்ட ஈட்டியோடே தோமா மிகவும் சிரமப்பட்டு தற்போது புனித “தோமா மலை” என்றழைக்கப்படும் பெரியமலைக்கு கொடிய வேதனையோடு

ஊர்ந்தப்படியே சென்று, அங்கு தான் நாட்டியிருந்த சிலுவையை தழுவிக்கொண்டு துடிதுடித்து உயிர்துறந்தார்.

இவ்விதமாக கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் பன்னிரண்டு சீடர்களில் ஒருவரான அப்போஸ்தலனாகிய பரிசுத்த தோமா கி.பி 72 —ம் ஆண்டு ஜுலை மாதம் 3—ம் தேதி நமது தாய்த்திரு நாட்டில் இரத்த சாட்சியாய் மரித்தார். அவருடைய சீடர்கள் அவரது உடலை எடுத்து மைலாப்பூரில் தோமாவின் கைகளினால் கட்டப்பட்ட ஆலயத்தின் அருகே ஒரு கல்லறையில் வைத்தார்கள். போர்ச்சுகீசியர்கள் மைலாப்பூரில் சிற்றாலயத்தில் தோமாவின் எலும்பு ஒன்றையும் அவரை கொல்ல பயன்படுத்திய ஈட்டியை எடுத்து கோவா கொண்டு சென்றனர். இப்போதும் தோமாவின் ஞாபகார்த்தமாக இருக்கிறது.

கி.பி 394 —ல் இவரது எலும்புகள் எடொசா நகருக்கு கொண்டு செல்லப்பட்டது. பின்னர் இத்தாலியிலுள்ள ஓர்டோனாவுக்கு எடுத்து செல்லப்பட்டது தற்போது அங்கு ஒரு பேராலயமும் எழுப்பப்பட்டுள்ளது. தோமாவை முதலில் புதைத்த மைலாப்பூரில் அதே இடத்தில் கி.பி 1893 —ம் ஆண்டில் ஒரு பேராலயம் கட்டப்பட்டது. சாந்தோம் கதீட்ரல் என்ற பெயரில் இப்பொழுதும் மைலாப்பூரில் காணப்படுகிறது.

இயேசுகிறிஸ்துவின் அப்போஸ்தலனாகிய பரிசுத்த தோமா இந்தியாவில் 17 ஆண்டுகள் சேவை செய்தார் 4 ஆண்டுகள் வடஇந்தியாவில் (பஞ்சாப்) சிந்து மாகாணத்திலும், 6ஆண்டுகள் கேரளாவிலும் 7 ஆண்டுகள் தமிழகத்திலும் தேவனுடைய சுவிசேஷ பணியை செம்மையாய் செய்துமுடித்தார். அல்லேலூயா.

**கர்த்தருக்கு ஊழியம் செய்கிற**
**சகோ. இயேசுநாயகம்**

---

## வாசல்கள் பலவிதம்

பிரியமானவர்களே! அன்றாட வாழ்க்கையில் வாசல்களை தொடாமல் மனிதனின் வாழ்க்கை இருக்க முடியாது. வேதத்திலும் சில விசித்திர — வினோதமான வாசல்களை, நம் மனதில் நிறுத்தி வைக்காத வாசல்களை, எருசலேமில் தாவீதின் நகரத்தைச் சுற்றி அமைந்த வாசல்களை உங்கள் சிந்தைக்கு விருந்தாக படைக்கிறேன் சுருக்கமாக இதோ...

ஆட்டு வாசல் (நெகே. 3:1):— இது புதிய ஏற்பாட்டிலும் குறிப்பிடப்பட்டிருக்கிறது (யோவா. 5:2). இது எருசலேமின் வடகிழக்கு மூலையில் பெதஸ்தா குளம் அருகே இருந்தது. இன்றும் இப்பகுதியில் ஆட்டுச் சந்தை நடைபெறுவதாக கூறுகிறார்கள். முற்காலத்தில் இது பென்யமீன் வசல் என்றும் அழைக்கப்பட்டிருக்கிறது.

மீன் வாசல் (நெகே. 3:3):— முதல் தேவாலய காலத்தில் இது எருசலேமின் முக்கிய வாசலாக விளங்கியது (IIநாளா. 3:14 செப். 1:10). இங்கு மீன் சந்தை இருந்திருக்கிறது. தற்கால தமஸ்கு வாசலின் அருகே இது இருந்திருக்க வேண்டும் என்று வேத வல்லுனர்கள் கருதுகின்றனர்.

பழைய வாசல் (நெகே. 3:6):— இது ஜெசனா வாசல் எனவும் அழைக்கப்படுகிறது. இது எருசலேமின் வடமேற்கு மூலையில் இருந்தது. இதனையே எப்பிராயிம் வாசல் என்றும் ஜனங்கள் அழைத்திருக்கிறார்கள்.

பள்ளத்தாக்கு வாசல் (நெகே. 3:13):— இது இன்னோம் கீதரோன் பள்ளத்தாக்குகளுக்கு இடைப்பட்ட திரோப்போயோன் பள்ளத்தாக்கு நோக்கி அமைந்திருக்கிறது. இதன் மீது உசியா ராஜா கோபுரம் கட்டினான் என்று IIநாளா. 26:9 —ல் வாசிக்கிறோம். அகழ்வாராய்ச்சியாளர்கள் கி.பி 1927 / 1928 —ல் இதனை கண்டு பிடித்ததாக வரலாறு கூறுகிறது.

குப்பைமேட்டு வாசல் (நெகே. 3:14):— இந்த குப்பைமேட்டு வாசல் வழியாக குப்கைகளைக் கொண்டு போய் இன்னோம் பள்ளத்தாக்கில் கொட்டி எரிப்பார்களாம். ஆகவே அதன் பெயரிலே இதனை குப்பைமேட்டு வாசல் என்றழைத்திருக்கிறார்கள்.

ஊருணி வாசல் (நெகே. 3:15):— என்—ரோகேல் நீரூற்றுக்குச் செல்லும் தென் மேற்கு மூலைக்கு அருகிலிருந்த வாசலைத்தான் மூதாதையர்கள் ஊருணி வாசல் என்ற பெயரில் அழைத்திருக்கின்றனர்.

தண்ணீர் வாசல் (நெகே. 3:26):— இது எருசலேமின் தண்ணீர் உறைவிடமான சீகோன் நீரூற்றுக்குச் செல்லும் வாசல் இதுவாகும். இங்கு வைத்துதான் நியாயப்பிரமாணம் வாசிக்கப்பட்டது என்பது இதன் சிறப்பு (நெகே. 8:1 3 16 நெகே. 12:37).

குதிரை வாசல் (நெகே. 3:28):— இங்கு குதிரைகள் கட்டப்படுகின்றன. இங்குதான் அத்தாலியாள் கொல்லப்பட்டாள் (IIநாளா. 23:15). இதன் வழியாக கீதரோன் பள்ளத்தாக்குக்குச் செல்லலாம் (எரே. 31:40). இது கிழக்குப் பகுதியில் அமைந்திருக்கிறது.

கிழக்கு வாசல் (நெகே. 3:29):— தற்கால தங்கவாசல் இந்தப் பகுதியில் இருந்திருக்க வேண்டும் என்று கருதும் ஆராய்ச்சியாளர்கள் இதுவே இதற்கான மிகுந்த சிறப்பு என்றும் கூறுகின்றனர்.

மிப்காத் வாசல் (நெகே. 3:31):— இது கிழக்கு மதிலின் வடக்குப் பகுதியில் அமைந்திருக்கிறது. இதனை பரிசோதக வாசல் என்றும் மொழி பெயர்க்கலாம். ஒருசிலர் இதனை காவல் வீட்டு வாசல் எனவும் கூறுகிறார்கள். வேறொரு சாரார் இதனையே தொகையிடும் வாசல் என்றும் அழைக்கின்றார்கள் (நெகே. 12:39).

**கர்த்தரின் அன்பில்**

**சகோ. ஜாண் பீட்டர்**

## ஊழியம் செய்ய இவர்களுக்காக ஜெபிக்கிறீர்களா!

தலைவர்
**சகோ. ரவிச்சந்திரன்**
**66889706 / 23913675**

செயலாளர்
**சகோ. ஸ்டாலின்**
**66021072**

பொருளாளர்
**சகோ. விசு**
**90049925**

பெண்கள் ஐக்கிய தலைவி
**Sis. ஜெயக்கொடி ஜாண்வெஸ்லி**
**99145593 / 23731904**

வாலிப ஐக்கிய தலைவர்
**சகோ. அற்புதராஜ்**
**60692485**





**சபையின் அஞ்சல் பெட்டி விலாசம்**

—— (Your Name), P. BOX. NO- 46795, 64018 – FAHAHEEL, KUWAIT.

உங்கள் ஜெபவிண்ணப்பங்களை அனுப்புவீர்களானால் உங்களுக்காக ஜெபிக்கிறோம்.

**Church website: www.ahmaditamilcongregation.org**
**Church E-mail : ahmaditamil.kw@yahoo.com**

சபையின் வாகனத் தேவையின் அழைப்புக்கு: 65868048

(Private Circulation Only)